ஊடக அறிக்கை

நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக, *2026.11.20* ஆம் திகதி முதல் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நேர்முகத் தேர்வுகளில், ஆசிரியர் சேவை யாப்பின் பிரகாரம் பிரயோகப் பரீட்சைகளை நடத்துவதற்காக இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் ஒவ்வொரு மாகாணத்திலும் நடைபெறும் ஒவ்வொரு பிரயோகப் பரீட்சைக் குழுவிலும் பெரும்பாலும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இன்று, மேற்படி சேவைகளைச் சேர்ந்த சில அதிகாரிகளும் சில சங்கங்களும், **"அரசாங்க நிறைவேற்று அதிகாரிகளின் ஒன்றினைந்த குழுவினால்" *2026.11.20* வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஒருநாள் வேலைநிறுத்தம்** காரணமாக, அன்றைய தினம் நேர்முகத் தேர்வுகளில் தங்களால் கலந்துகொள்ள முடியுமா அல்லது முடியாதா என்பதைத் தெளிவாக அறிவிக்கவில்லை.

இதன் காரணமாக, விண்ணப்பதாரர்கள் அன்றைய தினம் நேர்முகத் தேர்வுக்காக வருகை தரும்போது ஏதேனும் அசௌகரியங்களுக்கு உள்ளாகக்கூடும் என்பதைக் கருத்திற்கொண்டு, *2026.11.20* ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நேர்முகத் தேர்வுகள் மாத்திரம் பின்வருமாறு ஒத்திவைக்கப்படுகின்றன என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

மாகாணம்	**திகதி**
மேல் மாகாணம்	*2026.11.29*
வட மாகாணம்	*2026.11.28*
வடமேல் மாகாணம்	*2626.11.29*
மத்திய மாகாணம்	*2026.12.01*
ஊவா மாகாணம்	*2026.11.26*
தென் மாகாணம்	*2026.11.28*
கிழக்கு மாகாணம்	*2026.11.28*
சப்ரகமுவ மாகாணம்	*2026.11.28*
வட மத்திய மாகாணம்	*2026.11.26*

மேலும், குறித்த மாகாணங்களில் *2026.11.21* ஆம் திகதி முதல் தொடர்ந்து நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நேர்முகத் தேர்வுகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டதன் பிரகாரமே நடைபெறும்.

மேலும், நேர்முகத் தேர்வுகள் தொடர்பாக அழைப்புக் கடிதத்துடன் அனுப்பப்பட்ட அறிவித்தலின்படி, பாடசாலைகளுக்கான விருப்பங்களைத் தெரிவிப்பதற்குத் தேவையான தகவல்களை உள்ளீடு செய்யும் இணையவழி முறைமை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. இது *2026.11.19* ஆம் திகதி முதல் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் ***Teacher Recruitment Application System*** என்ற பெயரில் காட்சிப்படுத்தப்படும். ஏற்கனவே உங்களுக்கு அறிவிக்கப்பட்டதன்படி, *2026.11.19* ஆம் திகதியுடன் இந்த இணையவழி முறைமை இரத்துச் செய்யப்படமாட்டாது என்பதோடு விண்ணப்பதாரர்கள் தமக்கு நேர்முகத் தேர்வுக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ள தினத்தன்று இரவு *8.00* மணி வரை இந்த முறைமைக்குள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.